# மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்றமும், சமூக பொருளாதார தேவைகளும்

டிலக்ஷனா ப[1], ஜெயராஜா ச[2]

இலங்கையில் கடந்த 30 வருட காலத்தில் வட-கிழக்கில் எட்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டம் நீண்டகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டதொரு மாவட்டமாகும். யுத்தத்தினால் மட்டும் பாதிக்கப்பட்ட இம் மாவட்டத்தில் 141,928 பேர் இடம்பெயர்ந்திருந்தனர். நீண்ட காலப் பாதிப்பிக்குள்ளான கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரம் மற்றும் சமூக கட்டமைப்பினை முன்னேற்றும் முகமாக "நேகனகிற நவோதய" அபிவித்தித்திட்டம் 2007 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் உள்ளகரீதியில் இடம்பெயர்ந்த அனைத்து நபர்களுக்கும் 2009இல் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். விவசாயம், நீர்ப்பாசனம், வாழ்வாதார உதவிகள், மீன்பிடி, விலங்கு வேளாண்மை, அபிவிருத்தி, வீதிகள், சக்தி மற்றும் வலு, கல்வி அரசநிர்வாகம், சுகாதாரம் போன்ற தேவைகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அம்மக்களின் அபிவிருத்தி தேவைகள் பற்றிய நிலைப்பாடு எந்தளவில் உள்ளது, என்பதனை கண்டறிவதை இவ்வாய்வு பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவ்வாய்வில் முதல்நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இடம்பெயர்ந்தவர்களுள் 12 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 15,094 பேர் மீண்டும் தத்தமது பிரதேசங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். ஆய்வுக்காக கரடியனாறு, கொடுவாமடு, கோப்பாவெளி மயிலவெட்டவான், மரப்பாலம், பங்குடாவெளி, பெரியபுல்லுமலை, உறுகாமம், வேப்பவெட்டுவான், கித்துள், ஈரளக்குளம், கொம்மாதுறைத்தெற்கு ஆகிய கிராமங்களில் உள்ள 100 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆய்வு முடிவுகளின்படி 91% மக்கள் வீடு மற்றும் பௌதீக சொத்துக்களின் இழப்பினையும், 67% வீடுகள் 50% பாதிப்பினையும், 33% வீடுகள் முழுமையான பாதிப்பினையும், 64% தொழில் வாய்ப்பின்றியும், 36 சதவீதமானோர் சமூக வசதிகள் கிடைக்காதவர்களாகவும், 88% தொழில் தொடங்க போதிய நிதி வசதி அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். 63% வாழ்க்கைதரத்திற்கான உதவியை எதிர்பார்த்திருப்பவர்களாகவும், இடம்பெயர்வுக்கு முன்னர் 10,000 ரூபாவுக்கு மேல் வருமானம் பெற்ற நிலை மாறி தற்போது 1500 – 3000 ரூபா வரையான வருமானம் கிடைக்கின்ற நிலையும் காணப்படுகிறது. ஆய்வுப் பிரதேசத்தில் இனம் காணப்பட்ட பிரச்சினைகளும், இடம்பெயர்ந்த மக்களுக்கான தேவைகளும் மீள் குடியேற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித்திட்டங்களை சிறப்பாகத் திட்டமிடுவதற்கு உதவும்.

**திறவுச் சொற்கள் :** மீள்குடியேற்றம், அபிவிருத்தி, யுத்தம்

[1] *கற்கைகள் அலகு, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம். delaxshana@yahoo.com*
[2] *பொருளியல் துறை, வணிக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்*